## அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் பிப்ரவரி மாதம் (09.02.2021) ஆம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(MAWS)(MC.2))** அரசானை எண்.**G.O (Ms) No.40** நாள்.**05.02.2021** ன்படி, கூடலூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2020-2021 ன் கீழ் சாலை பணி,குடிநீர் பணி மழைநீர் வடிகாலுடன் சிறு பாலம் அமைத்தல் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு **ரூ.361.30** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு –**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1105,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

கூடலூர் நகராட்சிக்கு **தமிழ்நாடு உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் (I & A) 2020-21** -ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(MAWS)(MA-3(2))** அரசானை எண்.**G.O (Ms) No.01** நாள்.**06.01.2021.** ன்படி, கீழ்கண்ட பணிக்கு **ரூ. 50.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் கே.ஜி.பட்டி சாலையில் வடிகால் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். **(சிப்பம் எண்.1)** | **50.00** |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(MAWS)(MA-3(2))** அரசானை எண்.**G.O (Ms) No.01** நாள்.**06.01.2021.** ன்படி நிர்வாக அனுமதியும், மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக மண்டல செயற்பொறியாளர்,அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.1869/2020/B2 நாள்.08.01.2021.** ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு **02.02.2021** ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.99 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட பணிக்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **02.02.2021** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உரை மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)** தகுதிகள் சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி உரையினை **(Price Bid) 05.02.2021** ஆம் நாளன்று திறக்க இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டது. **05.02.2021 -** ஆம் நாளன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் மேற்படி பணிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.99%** கூடுதலான விலை விகிதத்தில் **திரு.ஆர்.சபீர்அலி** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார்.மேற்படி ஒப்பந்ததாரக்கு **05.02.2021** ஆம் நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **திரு.ஆர்.சபீர்அலி** ஒப்பந்ததாரர் அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மற்றும் கட்டுமான பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.99%** கூடுதலான விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **08.02.2021 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.99 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.82%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **திரு.ஆர்.சபீர்அலி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1106,அனுமதிக்கப்பட்டது.**